வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 07
11.04.2026 சனிக்கிழமை
இதழ் : 95
பக்கங்கள் : 08

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
MARUTHI MONEY EXCHANGE
PERMIT NO:DFE/RD/0117
390, HOSPITALROAD, JAFFNA.

அமைதி ஏற்பட்டாலும் ஈரான் போரினால் உலகப் பொருளாதாரத்தில் நிரந்தர வடு!

நாணய நிதியத்தின் தலைவர் எச்சரிக்கை

வாஷிங்டன், ஏப்ரல். 11

ஈரானுக்கு எதிரான போர் முடிவுக்கு வந்து, மத்திய கிழக்கில் நிலையான அமைதிக்கு இணக்கப்பாடு எட்டப்பட்டாலும் கூட, அது உலகப் பொருளாதாரத்தில் நிரந்தர வடுக்களை ஏற்படுத்தும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா எச்சரித்துள்ளார்.

இந்த மோதலில் அறிவிக்கப்பட்ட போர் நிறுத்தம் முறிவடையும் அபாயம் உள்ள நிலையில் ஆற்றிய உரையொன்றில் கிறிஸ்டலினா "போரினால் இதுவரை ஏற்பட்டுள்ள வடு விளைவுகள், இந்த ஆண்டு உலகளாவிய பொருளாதார வளர்ச்சியை முதலில் எதிர்பார்த்ததை விட குறைக்கும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஆறு வாரங்களுக்கு முன்பு இந்த மோதல் வெடிக்காமல் இருந்திருந்தால், 2026-ஆம் ஆண்டுக்கான உலகளாவிய வளர்ச்சி முன்னறிவிப்பை நாணய நிதியம் உயர்த்தியிருக்கும் என்று கூறிய அவர் "ஆனால் இப்போது, எங்களின் மிகவும் நம்பிக்கையான சூழலில் கூட வளர்ச்சிக் குறைப்பு

07

சபாநாயகர் - சாணக்கியன் சபையில் கடும் வாக்குவாதம்

கொழும்பு, ஏப். 11

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்தின்போது, சபாநாயகருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனுக்கும் இடையே ஏற்பட்ட கடும் வாக்குவாதத்தினால் சபையில் பெரும் பதற்றம் நிலவியது.

விவாதத்தின்போது குறுக்கிட்டுப் பேசிய பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனை அமருமாறு சபாநாயகர் பலமுறை அறிவுறுத்தினார்.

எனினும், அவர் தொடர்ந்து உரையாற்றியதால்,

07

ஜே.வி.பி எம்.பி.க்களின் வீடுகளில் மட்டுமே மின்சாரத் துண்டிப்பு இடம்பெறவேண்டும்!

சாமர சம்பத் எம்.பி. சபையில் கோரிக்கை

கொழும்பு, ஏப். 11

எதிர்காலத்தில் மின்வெட்டு அமல்படுத்தப்பட்டால், அது மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளில் மட்டுமே செய்யப்பட வேண்டும் எனவும், ஏனைய பொதுமக்களின் வீடுகளில் மின்சாரத்தை துண்டிக்கக் கூடாது

07

இலங்கையில் எரிபொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட இடமளியோம்!

சீனத் தூதுவர் திட்டவட்டம்

கொழும்பு, ஏப். 11

மேற்காசிய பிராந்தியத்தில் நிலவும் போர்ச் சூழலால் இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட எந்தச் சூழலிலும் இடமளிக்கப் போவதில்லை என இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் தெரிவித்துள்ளார்.

கண்டி, அஸ்கிரிய ஸ்ரீ சந்தானந்த பௌத்த

07

சதொசவில் பொருள்கள் தட்டுப்பாடு

கொழும்பு, ஏப். 11

லங்கா சதொச விற்பனை நிலையங்களில் ஏற்பட்டுள்ள தற்காலிகப் பொருள் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில்,

07

நாட்டில் 83 வீத மரணங்களுக்கு தொற்றா நோய்களே காரணம்!

சுகாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 11

நாட்டில் தொற்றா நோய்களின் தாக்கம் தீவிரமாக அதிகரித்து வருவதாக சுகாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பண்டிகைக் காலம் ஆரம்பமாகியுள்ள நிலையில், மக்களின் உணவுப் பழக்கவழக்கங்கள் மற்றும் வாழ்க்கை முறை மாற்றங்கள் இந்த நிலைமையை மேலும் மோசமாக்கக்கூடும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தொற்றா நோய்களால் நாட்டில் ஏற்படும்

07

மக்கள் நலன் கருதி மருத்துவர்கள் உடன் பணிக்கு திரும்பவேண்டும்!

சுகாதார அமைச்சர் கடும் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 11

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மருத்துவர்கள் மேற்கொண்டுள்ள வேலைநிறுத்தம் தொடர்பாகச் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தனது கடும் கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சுகாதார அமைச்சர்-

பொதுமக்கள் நலனைக் கருத்தில் கொண்டு மருத்துவர்கள் அனைவரும் உடனடியாகத்

07

அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வி!

கொழும்பு, ஏப். 11

எதிர்க்கட்சி உறுப்பினர்களால் வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை 104 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

இந்தப் பிரேரணைக்கு எதிராக 153 வாக்குகளும், ஆதரவாக 49 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

வலுசக்தி முகாமைத்துவம் தொடர்பாக அரசியலமைப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்தமை மற்றும் கடமைகளைப் புறக்கணித்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிராக இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்தக் கோரிக்கை!

கொழும்பு, ஏப். 11

தற்போதைய உலகளாவிய எரிசக்தி நெருக்கடி மற்றும் உள்நாட்டுத் தேவைகளைக் கருத்திற் கொண்டு, எதிர்வரும்

07

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் சொத்து விவரம் சமர்ப்பித்த மகிந்த

கொழும்பு, ஏப். 11

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தனது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குறித்த சத்தியக்கடதாசியை நேற்று இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவிடம் சமர்ப்பித்துள்ளார்.

தமது சொத்து விவரங்களை 14 நாள்களுக்குள் சமர்ப்பிக்குமாறு மகிந்த ராஜபக்ஷவுக்கு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு ஏற்கனவே அறிவித்திருந்தது.

அந்த 14 நாள்கள் கால அவகாசம் நேற்றுடன்

07

நிலக்கரி விசாரணைக்கு ஜனாதிபதி ஆணைக்குழு

அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 11

நிலக்கரி பிரச்னை தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக ஜனாதிபதியினால் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

07

பொய்க் குற்றச்சாட்டுகள் முன்வைக்க வேண்டாம்!

சாணக்கியன் எம்.பி.க்கு சபையில் கடற்றொழில் அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 11

பொய்க்குற்றச்சாட்டுக்களை முன்வைக்க வேண்டாம் என பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனிடம் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று பாராளுமன்ற

07

உண்மைகள் புனிதமானவை, கருத்துக்கள் சுதந்திரமானவை

ஈழத்தமிழ் தாயாரும் மகளும் பிரான்ஸில் சடலங்களாக மீட்பு!

பொலிஸார் தீவிர விசாரணை

பாரிஸ், ஏப். 11

பிரான்சின் செய்ன்-சென்-டெனிஸ் மாகாணத்திற்குட்பட்ட பான்டின் நகரில், ஈழத் தமிழ்த் தாயும் அவரது மகளும் சடலங்களாக மீட்கப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

பான்டின் நகரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் வசித்து வந்த இவர்கள், நீண்ட நாள்களாக வீட்டை விட்டு வெளியே வராததால் அக்கம் பக்கத்தினருக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த அதிகாரிகள் வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்றுள்ளனர்.

இதன்போதே இருவரும் உயிரிழந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

உயிரிழந்தவர்கள் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட 50 வயது மதிக்கத்தக்க தாயும், அவரது 20 வயது மகளும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஆரம்பகட்ட விசாரணைகளின் அடிப்படையில் இவர்கள் தற்கொலை செய்திருக்கலாம் என சந்தேகிக்கப்பட்டபோதிலும், உடற்கூறு ஆய்வு முடிவுகள் வெளிவந்த பின்னரே மரணத் திற்கான அதிகாரப்பூர்வமான காரணம் தெரியவரும்.

அவர்கள் தங்கியிருந்த வீட்டிலிருந்து ஏதேனும் கடிதங்கள் அல்லது முக்கிய ஆதாரங்கள் கண்டெடுக்கப்பட்டதா என்பது குறித்த விவரங்களை பொலிஸார் இதுவரை வெளியிடவில்லை.

இவர்களின் உயிரிழப்பிற்கான காரணம் குறித்து பிரான்ஸ் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

தனியார் பல்கலைக்கழக மாணவர்களிடையே மோதல்

ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 11

ஹோமாகம - மொரகஹஹேன பகுதியில் உள்ள விருந்தகம் ஒன்றில் வைத்து, தனியார் பல்கலைக்கழக மாணவர்கள் குழுவொன்றுக்கிடையே ஏற்பட்ட மோதலில் மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஹோமாகம - மொரகஹஹேன பகுதியில் அமைந்துள்ள விருந்தகம் ஒன்றில் தனியார் பல்கலைக்கழக மாணவர்கள் குழுவொன்றினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்து நிகழ்வின்போது, மாணவர்களுக்கு இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இந்தத் தர்க்கம் பின்னர் மோதலாக மாறியபோதே குறித்த மாணவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த மாணவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹோமாகம பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

நிலக்கரி விநியோக விலைமனு கோரல்கள் சட்டவிரோதமானவை

புபுது ஜயகொட குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 11

2025/2026ஆம் ஆண்டுகளில் நிலக்கரி விநியோகிப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட நீண்ட கால மற்றும் அவசரக்கால விலைமனு கோரல்கள் இரண்டும் முழுமையாக சட்டவிரோதமானவை என முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய தணிக்கை அலுவலகத்தின் அறிக்கையின் படி ட்ரைடெண்ட் கெம்பர் நிறுவனத்திற்கு 25 கப்பல்களுக்கான நீண்ட கால விநியோக உரிமை வழங்கப்பட்டதில் பாரிய முறைகேடு நடந்துள்ளது.

குறித்த நிறுவனம் ஓகஸ்ட் 22ஆம் திகதியே பதிவுக் கட்டணத்தைச் செலுத்தியுள்ள நிலையில், அதற்கு முன்னரே ஓகஸ்ட் 18 ஆம் திகதி அவர்களுக்கு விலைமனு ஆவணங்கள் மின்னஞ்சல் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், சட்ட மா அதிபரின் அனுமதி கிடைப்பதற்கு ஒரு நாளைக்கு முன்னரே இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. இது சட்டப்படி செல்லுபடியற்ற ஒரு உடன்படிக்கையாகும்.

அதேபோல், தரன்ஜோட் ரிசோர்சஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட 5 கப்பல்களுக்கான அவசர விலைமனு கோரலும் விதிகளுக்கு முரணானது. கோரப்பட்ட குறைந்தபட்ச அனுபவம் அந்த நிறுவனத்திற்கு இல்லை என்பது தணிக்கை அறிக்கையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த முறையற்ற கொடுக்கல் வாங்கல்களுக்குப் பின்னால் நாட்டின் பிரபல வர்த்தகர் ஒருவரின் தலையீடு மற்றும் உள்நாட்டு முகவர் நிறுவனத்தின் செல்வாக்கு இருக்கின்றதா என்ற பலமான சந்தேகம் எழுந்துள்ளது. இந்த முறைகேடுகளால் ஏற்படும் நட்டத்தை மின்சாரக் கட்டண அதிகரிப்பு மூலம் மக்கள் மீது சுமத்த இடமளிக்க முடியாது. எனவே, இந்த இரண்டு விலைமனு கோரல்களையும் இரத்து செய்யக் கோரி முன்னிலை சோசலிசக் கட்சி விரைவில் நீதிமன்றத்தை நாடவுள்ளது-என்றார். (அ)

பொருளாதாரம் 4.7 சதவீதமாகக் குறைய வாய்ப்பு

கொழும்பு, ஏப். 11

இந்த ஆண்டு மூன்றாம் காலாண்டு வரை மத்திய கிழக்கில் நிலவும் மோதல்கள் நீடித்தால், ஆசியாவின் பொருளாதார வளர்ச்சி 2025-இல் இருந்த 5.4 வீத மட்டத்திலிருந்து, 2026-இல் 4.7 வீதமாகக் குறையக்கூடும் என ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

இதேவேளையில், பணவீக்கம் 3.0 வீத மட்டத்திலிருந்து 5.6 வீதமாக உயரக்கூடும் எனவும் தெரிவித்துள்ளது. (அ)

இன்று காலை 10.30 மணிக்கு
DAN
தமிழ் ஒளி
மழலைகள்
நேரம்
உங்கள் டான் தமிழ் ஒளியில்

பள்ளிவாசலுக்கு செல்லும் பாப்பரசர்



வத்திக்கான், ஏப். 11

கத்தோலிக்க திருச்சபையின் தலைவராகப் பொறுப்பேற்ற பின்னர் திருத்தந்தை 14ஆம் லியோ, ஆபிரிக்கக் கண்டத்தின் மீதான உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் நோக்கில் எதிர்வரும் திங்கட்கிழமை தனது 10 நாள் பயணத்தைத் தொடங்கவுள்ளார்.

ஏப்ரல் 13 முதல் 23 வரை நடைபெறவுள்ள இந்தப் பயணத்தில் அவர் அல்ஜீரியா, கமரூன், அங்கோலா மற்றும் ஈக்குவடோரியல் கினியா ஆகிய நான்கு நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

சுமார் 18,000 கிலோமீற்றர் தூரம் கொண்ட இந்தப் பயணத் திட்டத்தில் 11 நகரங்களுக்குச் சென்று 25 உரைகளை நிகழ்த்த அவர் திட்டமிட்டுள்ளார்.

உலகின் கத்தோலிக்கர்களில் ஐந்தில் ஒரு பங்கினர் ஆபிரிக்காவில் வசித்து வரும் நிலையில், அங்கு திருச்சபை மிக வேகமாக வளர்ந்து வருவதைச் சுட்டிக்காட்டும் விதமாக இந்தப் பயணம் அமைகிறது.

70 வயதாகும் திருத்தந்தை லியோ, அமெரிக்காவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் திருத்தந்தை ஆவார்.

அல்ஜீரியாவில் கத்தோலிக்க-முஸ்லிம் உரையாடலை ஊக்குவிக்கும் வகையில் பெரிய மசூதிக்குச் செல்லவுள்ள அவர், கமரூனில் உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைதிச் செய்தியை வலியுறுத்தவுள்ளார். (அ)

தரம் குறைந்த நிலக்கரி விவகாரம்: 6 மணித்தியாலங்களாக விசாரணை

கொழும்பு, ஏப். 11

தரம் குறைந்த நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டமை தொடர்பில் அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவான “கோப்” குழு நேற்று முன் தினம் நடத்திய விசாரணை கடும் வாதப்பிரதிவாதங்களுக்கு மத்தியில் நீண்ட நேரம் இடம்பெற்றது.

பாராளுமன்ற பொது நிறுவனங்கள் பற்றிய குழுவின் தலைவர் நிஷாந்த சமரவீர தலைமையில் நேற்று முன் தினம் பிற்பகல் 2:00 மணிக்கு ஆரம்பமான இந்தக் கூட்டம், இரவு 8:30 மணி வரை சுமார் ஆறரை மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றது.

தரம் குறைந்த நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டதன் பின்னணியில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது, நிலக்கரி இறக்குமதியின் போது தெரியாமல் தவறு நடந்துள்ளதாக ஒரு தரப்பு உறுப்பினர்கள் வாதிட்டனர். எனினும், இது திட்டமிட்டு தெரிந்தே செய்யப்பட்ட தவறு என மற்றுமொரு தரப்பினர் கடுமையாகச் சாடியதை அடுத்து சபையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் தற்போதைய நிலைமை, நிலக்கரி கொள்வனவு தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் சர்ச்சைக்குரிய நிலக்கரி மாதிரிகள் தொடர்பான ஆய்வகப் பரிசோதனை முடிவுகள் ஆகியன இதன்போது மேசையில் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்த நீண்ட நேர விசாரணையில் ஆளும் தரப்பு உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டதுடன், எதிர்க்கட்சிகள் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான சுஜீவ சேனசிங்க மற்றும் டி.வி. சானக்க ஆகியோர் இறுதிவரை கலந்துகொண்டு கேள்விகளை எழுப்பினர்.

குறித்த விசாரணைக்காக மின்சக்தி அமைச்சின் உயரதிகாரிகள் மற்றும் லங்கா நிலக்கரி நிறுவனத்தின் அதிகாரிகள் அழைக்கப்பட்டிருந்தனர். நிலக்கரி கொள்வனவு ஊடாக அரசுக்கு ஏற்பட்டுள்ள நட்டம் மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அதிகாரிகள் குறித்து இதன்போது தீவிரமாக விவாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

மதுபானப் போத்தலை இலஞ்சமாக பெற்ற தர்மபுரம் பொலிஸ் உத்தியோகத்தர் கைது!

கிளிநொச்சி, ஏப். 11

தர்மபுரம் பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், பொதுமகன் ஒருவரிடமிருந்து மதுபானப் போத்தலை இலஞ்சமாகப் பெற்றபோது, இலஞ்சம் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகளால் நேற்று முன் தினம் பிற்பகல் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர், இதற்கு முன்னர் மோட்டார் சைக்கிள் ஒன்றை சோதனையிட்டபோது, அது பதிவு செய்யப்படாத வாகனம் எனத் தெரியவந்துள்ளது. அந்த மோட்டார் சைக்கிள் மீது சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு, அதன் உரிமையாளரிடம் 10ஆயிரம் ரூபா பணத்தை இலஞ்சமாக கோரியுள்ளார்.

வாகன உரிமையாளர் அவ்வளவு பெரிய தொகையை வழங்க மறுத்ததை அடுத்து, குறித்த அதிகாரி அதற்குப் பதிலாக ஒரு குப்பி சாராயத்தை (கால் போத்தல் சாராயம்) இலஞ்சமாகத் தருமாறு கேட்டுள்ளார். அத்துடன், அந்த மதுபானப் போத்தலைத் தரும் வரை உரிமையாளரின் தேசிய அடையாள அட்டையை அந்த அதிகாரி தனது பாதுகாப்பில் சட்டவிரோதமாக வைத்திருந்துள்ளார்.

நேற்று முன் தினம் பிற்பகல் 3.00 மணியளவில், தர்மபுரம் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள கடைக்கு முன்னால், சிவில் உடையில் இருந்த அந்த அதிகாரி குறித்த நபரிடமிருந்து மதுபானப் போத்தலைப் பெற்றுக் கொண்டார்.

அப்போது, இலஞ்சம் அல்லது ஊழல் புலனாய்வுப் பிரிவின் அதிகாரி ரத்நாயக்க தலைமையிலான குழுவினர் வானில் அங்கு வந்து, அந்த அதிகாரியை கையும் மெய்யுமாக கைது செய்தனர்.

குறித்த உத்தியோகத்தர் நேற்று முன் தினம் காலை 07.40 மணிக்கு பணிக்கு சமூகமளித்துள்ளதுடன், எவ்வித விடுப்பு அனுமதியும் பெறாமல் சிவில் உடையில் இந்த ஊழல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட அதிகாரி மேலதிக விசாரணைக்காக இலஞ்ச ஊழல் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளால் அழைத்துச் செல்லப்பட்டார். (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
11.04.2026 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், பங்குனி 28

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தேசிய நெருக்கடியாக மாறியிருக்கும் வீதி விபத்துக்கள்

பண்டிகைக் காலங்கள் ஒரு புறத்தில் கொண்டாட்டங்களுக்கு உரியவையாக விளங்குகின்ற அதேவேளை, மறுபுறத்தில் ஆபத்துக்கள் நிறைந்த காலப்பகுதிகளாகவும் இருக்கின்றன. இந்த ஆபத்துக்களில் பிரதானமானது வீதி விபத்துக்களாகும்.

இலங்கை உலகில் வீதி விபத்துக்களினால் (சனத்தொகையுடன் ஒப்பிடும்போது வீத அடிப்படையில்) அடிக்கடி அதிக எண்ணிக்கையில் மரணங்கள் இடம் பெறுகின்ற நாடுகளில் ஒன்றாக விளங்குகிறது. வீதி விபத்துக்கள் காரணமாக ஏற்படுகின்ற காயங்களினால் இலங்கையில் ஒவ்வொரு மணித்தியாலமும் மூவர் மரணமடைவதாக மருத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள்.

வீதி விபத்துக்கள் அதிகமாக இடம்பெறுகின்ற பண்டிகைக் காலங்களில் சித்திரைப் புத்தாண்டு நாட்கள் பிரத்தியேகமாக குறிப்பிடத்தக்கவை. விபத்துக்கள் பற்றிய தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட அண்மைய ஆய்வொன்றின் மூலம் மற்றைய மாதங்களுடன் ஒப்பிடும்போது ஏப்ரில் மாதத்தில் வீதி விபத்துக்கள் 10 சதவீதம் தொடக்கம் 30 சதவீதம் வரை அதிகரிப்பதாக கண்டறியப்பட்டிருக்கிறது.

உலக சுகாதார நிறுவனத்தின் மதிப்பீடொன்று இலங்கையில் மரணங்களுக்கான முக்கிய காரணங்களில் வீதி விபத்துக்கள் ஒன்பதாவது இடத்தில் இருப்பதாக கூறுகிறது. அதாவது இலங்கையில் வருடமொன்றுக்கு ஒரு இலட்சம் பேரில் 19.72 பேர் வீதிவிபத்துக்களில் மரணமடைகிறார்கள்.

வீதி விபத்துக்களில் மரணங்கள் தொடர்ந்து அதிகரித்துவரும் நிலையில், அவற்றைத் தடுப்பதில் சமூகத்துக்கு இருக்கும் கூட்டுப் பொறுப்பு முறையாக விளங்கிக் கொள்ளப்படாத காணத்தினால் பாரதூரமான விளைவுகள் ஏற்படுவதாக நிபுணர்கள் எச்சரிக்கை செய்கிறார்கள்.

இத்தகைய பின்னணியில், பண்டிகைக் காலத்தில் பொதுமக்களின் சுகாதாரத்தையும் பாதுகாப்பையும் மேம்படுத்துவதற்காக இலங்கை மருத்துவர் சங்கம் (Sri Lanka Medical Association) சில தினங்களுக்கு முன்னர் செய்தியாளர்கள் மகாநாடொன்றை கொழும்பில் ஏற்பாடு செய்திருந்தது. வீதி விபத்துக்களில் குறிப்பாக, மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் அதிக எண்ணிக்கையில் காயமடையும் சம்பவங்களில் கவனத்தைச் செலுத்தி மக்களுக்கு ஆலோசனைகளைக் கூறுவதே அந்த மகாநாட்டின் நோக்கமாகும்.

அந்த மகாநாட்டில் உரையாற்றிய இலங்கை மருத்துவர் சங்கத்தின் தலைவர் வைத்தியக் கலாநிதி மனில்கா சுமணதிலக்க வீதி விபத்துக்கள் இன்று ஒரு தேசிய நெருக்கடியாக மாறிவிட்டதாகவும் இலங்கையில் கடந்த ஐந்து வருடங்களில் விபத்துக்களில் 15 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் மரணமடைந்தத அதேவேளை, கடந்த வருடம் மாத்திரம் 2,710 பேர் பலியானதாகவும் குறிப்பிட்டார்.

இவ்வருடம் மார்ச் 10 வரையான காலப் பகுதியில் 457 வீதி விபத்துக்களில் 475 பேர் பலியானதாகவும் 1,800 பேர் படுகாயமடைந்ததாகவும் அவர்களில் பெரும்பாலானவர்கள் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவர்களும் பின்னால் இருந்து பயணித்தவர்களுமே என்றும் அவர் கூறினார்.

வீதி விபத்துக்களை தனிப்பட்டவர்களுக்கு நிகழ்கின்ற அனர்த்தங்களாக அல்லாமல். பொதுவில் சமூகத்துக்கு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துகின்ற பரந்தளவிலான தேசிய நெருக்கடியாக நோக்கி விபத்துக்களை இயன்றவரை தவிர்க்கக் கூடியதாக மக்கள் சமூகப் பொறுப்புடனும் விழிப்புடனும் செயற்பட வேண்டும் என்று இலங்கை மருத்துவர் சங்கம் கூறியிருக்கும் அறிவுரையை மக்கள் கருத்தூன்றிய கவனத்தில் எடுக்க வேண்டும் என்று ஈழநாடு வேண்டிக் கொள்கிறது.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 2026 இல் 4 சதவீதமாக வீழ்ச்சியடையும்

ஆசிய அபிவிருத்தி வங்கி அறிக்கை

கொழும்பு, ஏப். 11

2025 ஆம் ஆண்டில் காணப்பட்ட 5.0 சதவீத இலங்கையின் பொருளாதார வளர்ச்சியானது 2026 இல் 4.0 சதவீதமாக வீழ்ச்சியடையும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு மோதலானது, அபிவிருத்தியடைந்து வரும் ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியத்தின் பொருளாதார நிலவரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பநிலை ஸ்திரத்தன்மை நிலவும் சூழலில், பிராந்திய வளர்ச்சியானது 2026 மற்றும் 2027 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் 5.1 சதவீதமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதிகரித்த எரிசக்தி விலைகள் உற்பத்திச் செலவுகளையும் நுகர்வோர் விலைகளையும் உயர்த்தும் அதேவேளை, அமெரிக்க சுங்க வரி அதிகரிப்புக்கு முன்னதாகவே கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அதீத ஏற்றுமதி நடவடிக்கைகளைத் தொடர்ந்து, ஏற்றுமதி வளர்ச்சி வழமைக்குத் திரும்பும்.

தெற்காசியா மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் தென்கிழக்கு ஆசியா ஆகியவற்றில் நிலவும் உறுதியான உள்நாட்டுத் தேவையானது வளர்ச்சியைத் தொடர்ந்து நிலைநிறுத்தும்.

2025ஆம் ஆண்டில் பல பொருளாதாரங்களில் தணிந்திருந்த பணவீக்கம், மோதல்களுடன் தொடர்புடைய அதிக எரிசக்தி விலைகளின் தாக்கம் காரணமாக, இந்த ஆண்டு 3.6 சதவீதமாக உயரும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஆசிய அபிவிருத்தி வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2027 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியானது 4.2 சதவீதமாகச் சிறியளவில் அதிகரிக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பணவீக்கமானது 2026 ஆம் ஆண்டில் -0.5 சதவீதத்திலிருந்து 5.2 சதவீதமாக உயர்ந்து, பின்னர் 2027 இல் 4.0 சதவீதமாகத் குறைவடையும் என ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

(எ)

உலக சந்தையில் நேற்று மீண்டும் மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 11

அமெரிக்கா மற்றும் ஈரானுக்கு இடையிலான அமைதிப் பேச்சுவார்த்தைகள் பாகிஸ்தானில் ஆரம்பமான நிலையில், உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை தொடர்ந்து உயர் மட்டத்திலேயே நீடிக்கிறது.

இரு நாடுகளுக்கும் இடையே எட்டப்பட்ட இரண்டு வார கால தற்காலிக போர்நிறுத்த ஒப்பந்தம் நீடிக்குமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளதே இதற்கு முக்கிய காரணமாக கருதப்படுகிறது.

நேற்று வெள்ளிக்கிழமை காலை நிலவரப்படி, உலக சந்தையில் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் ஒரு பீப்பாய் 96. 75 டொலராக விற்பனையானது. போர்நிறுத்த அறிவிப்பை அடுத்து விலை சற்று குறைந்திருந்தாலும், தற்போது மீண்டும் 100 டொலர் என்ற இலக்கை நோக்கி விலை அதிகரித்து வருகிறது.

உலகின் 20 சதவீத எண்ணெய் விநியோகம் நடைபெறும் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த ஹோர்முஸ் நீரிணை தற்போது ஈரானின் கட்டுப்பாட்டில் உள்ளது. இது தொடர்பில் ஈரானின் புதிய உச்ச தலைவர் ஐயத்துல்லா மொஜ்தபா கமெனி தெரிவிக்கையில்,

ஹோர்முஸ் நீரிணை மூலம் கப்பல் போக்குவரத்தின் மீது ஈரான் தனது பிடியை இறுக்கப்போவதை அவர் சூட்சகமாக உணர்த்தியுள்ளார்.

ஹோர்முஸ் நீரிணையின் முகாமைத்துவம் இனி ஒரு புதிய கட்டத்துக்கு நகரும்.

இதன் மூலம் கப்பல் போக்குவரத்தின் மீது ஈரான் தனது பிடியை இறுக்கும்.- என்றார்.

ஈரானின் இந்த நடவடிக்கைக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது ட்ரூத் சோஷியல் தளத்தில் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

“எண்ணெய் தாங்கிகளை அனுமதிப்பதில் ஈரான் மிகவும் மோசமான மற்றும் கௌரவமற்ற முறையில் செயல்படுகிறது. ராங்கர்களுக்கு கட்டணம் வசூலிப்பதாக வரும் செய்திகள் உண்மையானால், அதை அவர்கள் இப்போதே நிறுத்த வேண்டும். இல்லையெனில் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.” - என்று ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

(எ)

குமார ஜயக்கொடியை பதவி விலகக் கோரி பாராளுமன்ற வாயிலின் அருகே போராட்டம்

கொழும்பு, ஏப். 11

பாராளுமன்ற நுழைவாயிலுக்கு அருகிலுள்ள பொல்துவ சந்தியில் இன்று வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி உடனடியாக பதவி விலக வேண்டும் எனக் கோரி பாரிய எதிர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப் பட்டது.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பெருமளவிலான பொதுமக்கள் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக அப்பகுதியில் கடும் பதற்ற நிலை ஏற்பட்டதுடன், போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேரில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

நாட்டில் நிலவி வரும் வலுசக்தி நெருக்கடி மற்றும் நிர்வாகச் சீர்கேடுகளுக்குப் பொறுப்பேற்று அமைச்சர் குமார ஜயக்கொடி உடனடியாக பதவி விலகவேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

மேலும், அமைச்சரின் தோல்வியடைந்த கொள்கைகள் காரணமாக மக்கள் வீதிகளில் இறங்கும் நிலை உருவாகியுள்ளது என்றும், மக்களின் வலியை உணராத அரசாங்கத்திற்கு எதிரான போராட்டம் தொடரும் என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவருடன் இணைந்து இருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் அரசாங்கத்திற்கு எதிராக கோஷங்களை எழுப்பியதுடன், பொல்துவ சந்தியை முற்றுகையிட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தால் பொல்துவ சந்தி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பல மணிநேரம் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

(அ)

ஏப்ரல் - 11 சனிக்கிழமை
விசுவாவசு வருடம் - பங்குனி 28
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : நவமி

இன்றைய ராசிபலன்

மேடம்

கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் இன்று முடியும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

இடபம்

சந்திராஷ்டமம் இருப்பதால் வீட்டிலும் வெளியிலும் மற்றவர்களை அனுசரித்துப் போங்கள். கணுக்கால் வலிக்கும். உத்தியோகத்தில் ஈகோ அதிகரிக்கும். வேலைச்சுமை மிகுந்த நாள்.

மிதுனம்

உங்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

கடகம்

குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். உயரதிகாரிகள் உங்களை கலந்தாலோ சித்து சில முடிவுகள் எடுப்பார்கள். தொட்டது துலங்கும் நாள்.

சிம்மம்

குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். உத்தியோகத்தில் உயர் அதிகாரி உங்களை மதித்துப் பேசுவார்கள்.

கன்னி

எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். உழைப்பால் உயரும் நாள்.

துலாம்

உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். தைரியம் கூடும் நாள்.

விருட்சிகம்

குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். உறவினர்கள் உங்களைப் புரிந்துக் கொள்வார்கள். உத்தியோகத்தில் புது சலுகைகள் கிடைக்கும். நிம்மதியான நாள்.

தனுசு

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கொஞ்சம் பொறுமையை இழப்பீர்கள். சிலரின் நயவஞ்சக செயலை நினைத்து வருந்துவீர்கள். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருப்பது நல்லது. அலைச்சல் நாள்.

மகரம்

குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வெளிவட்டாரத்தில் நிதானம் அவசியம். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிப்பீர்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

கும்பம்

குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசுவீர்கள். உங்களுடைய ஆலோசனைகளை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். சொந்த பந்தங்களின் சுயரூபத்தை அறிந்து கொள்வீர்கள். இனிமையான நாள்.

மீனம்

தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவுக் கிடைக்கும். மதிப்புக் கூடும் நாள்.

வீதி சமிக்ஞைகளை கடைப்பிடிக்க வலியுறுத்தி விழிப்புணர்வு நிகழ்வு

யாழ்ப்பாணத்தில் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஏப். 11

அதிகரித்துவரும் வீதி விபத்துக்களை தடுப்பதற்கும் அது தொடர்பில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் முகமாக யாழ்ப்பாணத்தில் நேற்று வித்தியாசமான முறையில் விழிப்புணர்வு முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பொலிஸாரும் தன்னார்வ இளைஞர் அமைப்புகளும் இணைந்து நேற்றுக்காலை ஆரியகுளம் சந்தியிலுள்ள வீதிச் சமிக்ஞையில் இந்த விழிப்புணர்வு நிகழ்வை முன்னெடுத்தனர். இதன்போது, சந்தியிலுள்ள சமிக்ஞையில் பாதசாரிகள் கடக்கும் கடவையில் அவர்களுக்கு இடையூறாக நிறுத்தியுள்ள வாகனங்களை அகற்றியும் அவர்களை எச்சரித்தும் விழிப்புணர்வில் ஈடுபட்டனர். வித்தியாசமான முறையில் இவர்கள் வேடமிட்டிருந்தனர். (எ-03)

சிறுவனின் ஆடைகளை களைந்து தாக்குதல் நடத்தி காணொலி பதிவு

ஒருவர் மறியலில், ஒருவர் தலைமறைவு

யாழ்ப்பாணம், ஏப். 11

யாழ்ப்பாணத்தில் 17 வயது சிறுவன் ஒருவனின் ஆடைகளை களைந்து, அவன்மீது தாக்குதல் நடத்தி, அதனை காணொலியாக பதிவு செய்து வேறு நபர்களுக்கு அனுப்பிய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இன்னொருவர் தலைமறைவாகியுள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதனார்மடம் பகுதியில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த சிறுவனின் மூத்த சகோதரனை பழிவாங்கும் நோக்கில் இந்தச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கைது செய்யப்பட்டவரை நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை, அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை மற்றைய சந்தேகநபரை தேடும் பணிகளில் சுன்னாகம் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (எ-05)

வற்றாப்பளையில் வீதியோர மரநடுகை

முல்லைத்தீவு, ஏப். 11

முல்லைத்தீவு மாவட்டத்தின் வற்றாப்பளை கிராமத்தில் வீதியோரங்களில் மரநடுகை திட்டம் செந்தமிழ் விளையாட்டுக்கழகத்தால் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட் டது.

கரைதுறைபற்று பிரதேச சபை, பள்ளவெளி சனசமூக நிலையம், செந்தமிழ் விளையாட்டுக் கழகம், மாதர் சங்கம், வடக்கு மற்றும் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் மகளிர் குழுக்கள் இணைந்து இந்த நிகழ்வை முன்னெடுத்தனர்.

கரைதுறைபற்று பிரதேச சபை உறுப்பினர் ஞா. யூட்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி மஞ்சுளாதேவி பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

வவுனியாவில் கோர விபத்து ஓய்வு பெற்ற ஆசிரியர் பலி!

வவுனியா, ஏப். 11

வவுனியா- பட்டாணிச்சூர் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வீதி விபத்தில் ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த வாகன விபத்தில் 64 வயது ஓய்வு பெற்ற ஆசிரியரே உயிரிழந்தார்.

குறித்த பகுதியில் ஓட்டோவில் பயணித்துக்கொண்டிருந்த போது அவ்வீதியால் பயணித்த கனரக வாகனம் ஓட்டோ மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலையில் உடனடியாக மீட்கப்பட்டு வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், இந்த விபத்து தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

10 இந்திய மீனவர்கள் கைது!

மன்னார், ஏப். 11

மன்னார் கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஒரு இந்திய இழுவைப்படகுடன் 10 மீனவர்களை கடற்படையினர் கைது செய்தனர்.

மன்னார் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த பல இந்திய படகுகளை அகற்றும் நோக்கில் வட மத்திய கடற்படை கட்டளையினர் முன்னெடுத்த விசேட நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது, இலங்கையின் கடல் எல்லைச் சட்டங்களை மீறி தொடர்ந்து மீன்பிடியில் ஈடுபட்டிருந்த ஒரு படகை கடற்படையினர் சுற்றிவளைத்து சோதனையிட்டனர்.

இந்த நடவடிக்கையின் மூலம் கைப்பற்றப்பட்ட இந்திய படகு மற்றும் கைது செய்யப்பட்ட மீனவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கிளிநொச்சி மீன்வள ஆய்வாளரிடம் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டனர்.

இலங்கை கடற்பரப்புக்குள் வெளிநாட்டு மீனவர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் கடற்படையினர் இவ்வாறான தொடர்ச்சியான கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

கணினி குற்றங்களுக்கு பயன்படும்

சட்டவிரோத பொருட்களுடன் சீன பிரஜைகள் இருவர் கைது

கொழும்பு, ஏப். 11

கணினி குற்றங்கள் மற்றும் நிதி மோசடிகளுக்கு பயன்படுத்தப்படும் 50 இலட்சம் ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய நவீன ரக தொலைபேசிகள் மற்றும் சட்டவிரோத பொருட்களுடன் இரண்டு சீனப் பிரஜைகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

சீனாவிலிருந்து நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை வருகை தந்த 31 மற்றும் 35 வயதுடைய சீன நாட்டுத் தம்பதியினரே, விமான நிலையத்தின் கிரீன் சேனல் ஊடாக பொருட்களைக் கடத்த முயன்றபோது கைது செய்யப்பட்டனர்.

இவர்களது பயணப் பொதிகளிலிருந்து பயன்படுத்தப்பட்ட 84 அப்பிள் ரக தொலைபேசிகள், 10, 000 சீனத் தயாரிப்பு சிகரெட்கள் மற்றும் 40 கிலோகிராம் சீனப் பாக்கு என்பன மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டன.

குறித்த நபர்கள் சீனாவிலிருந்து சைனா ஈஸ்டர்ன் விமான சேவைக்குச் சொந்தமான விமானம் மூலம் நாட்டை வந்தடைந்தனர் என்று விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளுக்காக குறித்த சீனப் பிரஜைகள் மற்றும் கைப்பற்றப்பட்ட பொருட்கள் பொலிஸாரின் விசேட விசாரணை பிரிவினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

(எ)

தொல்பொருட்களுடன் நான்கு பேர் சிக்கினர்!

புத்தளம், ஏப். 11

புத்தளம் - மதுரங்குளி நகரில் தொல்பொருட்கள் மற்றும் வாகனத்துடன் நால்வர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மதுரங்குளி பொலிஸ் அதிகாரிகளால் வியாழக்கிழமை இரவு முன்னெடுக்கப்பட்ட வாகன சோதனையின் போது, மதுரங்குளி நகரப் பகுதியில் வைத்து கார் ஒன்று சோதனையிடப்பட்டது.

இதன்போது சுமார் ஒன்றரை அடி உயரமான, கல்லினால் செதுக்கப்பட்ட தாமரை மலர்ச் சிற்பம் மற்றும் சுவஸ்திகா சின்னம் பொறிக்கப்பட்ட பேழை ஒன்றும் கண்டெடுக்கப்பட்டன. அந்தப் பேழைக்குள் பெறுமதியான மாணிக்கக் கற்கள் என சந்தேகிக்கப்படும் சில கற்களும் காணப்பட்டன.

சம்பவம் தொடர்பில் கல்கமுவ மற்றும் மதுரங்குளி பகுதிகளை சேர்ந்த 22, 30, 32 மற்றும் 47 வயதுடைய நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து கார் மற்றும் வான் ஆகிய வாகனங்களும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன. இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளில் மதுரங்குளி பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

(எ)

போலி சாரதி அனுமதிப்பத்திரங்களை விநியோகித்து வந்த இருவர் கைது

கொழும்பு, ஏப். 11

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் உத்தியோகபூர்வ பாதுகாப்பு இலச்சினைகளை பயன்படுத்தி போலி சாரதி அனுமதிப்பத்திரங்களை விநியோகித்து வந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் உட்பட இருவர் விசேட அதிரடிப்படையினரால் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டனர்.

ஹோமாகம மற்றும் புளத்கொஹூபிட்டிய பிரதேசங்களை சேர்ந்த 34 மற்றும் 28 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

வேரஹெர பகுதியில் அமைந்துள்ள மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துக்கு வருகை தரும் நபர்களை ஏமாற்றி, பணம் பெற்றுக்கொண்டு போலி சாரதி அனுமதிப்பத்திரங்களை இவர்கள் வழங்கி வந்துள்ளனர்.

பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் வாடிக்கையாளர் போல வேடமிட்டு, 10,000 ரூபாய்க்கு அனுமதிப்பத்திரம் பெறச் சென்ற போதே பிரதான சந்தேகநபர் சிக்கியுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பணியாற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவரிடமிருந்து அனுமதிப்பத்திரங்களுக்கு ஒட்டப்படும் 9 உத்தியோகபூர்வ பாதுகாப்பு ஸ்ரிக்கர்கள் கைப்பற்றப்பட்டன.

(எ)

வீதி விபத்துக்களில் சிக்கி சிறுவன் உட்பட மூவர் பலி

கொழும்பு, ஏப். 11

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற வீதி விபத்துக்களில் சிறுவன் உட்பட மூவர் உயிரிழந்தனர்.

அம்பலாந்தோட்டை - போலான, கொக்கல்ல வீதியின் ஒயிலான சந்திக்கு அருகில் இரவு இடம்பெற்ற விபத்தில் 15 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிள், வேகக் கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதியும் பின்னால் அமர்ந்து சென்ற சிறுவனும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது, குறித்த சிறுவன் உயிரிழந்தார்.

இதேவேளை, மினுவாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மினுவாங்கொடை - கட்டுநாயக்க வீதி பகுதியில் வியாழக்கிழமை காலை வான் ஒன்றில் மோதி பாதசாரி ஒருவர் உயிரிழந்தார்.

மினுவாங்கொடை நோக்கி பயணித்த வான் ஒன்று, வீதியைக் கடக்க முயன்ற பாதசாரி மீது மோதியதில் இந்த விபத்து நேர்ந்தது.

இந்த விபத்தில் காயமடைந்த பாதசாரி மினுவாங்கொடை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். விபத்துடன் தொடர்புடைய வானின் சாரதி கைது செய்யப்பட்டார்.

மேலும், ஹொரண - குருகொட பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஓட்டோவில் பயணித்த முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

பாதுக்கை பகுதியில் இருந்து குருகொட நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள், அதே திசையில் முன்னால் சென்ற ஓட்டோவில் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதியும் ஓட்டோ சாரதியும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இந்த நிலையில், ஓட்டோ சாரதியான 69 வயது முதியவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

(எ)

பெருமளவான கஞ்சாவுடன் இருவர் கைது!

சிலாபம், ஏப். 11

சிலாபம் - தெதுரு ஓயா பகுதியில் பாரியளவிலான கஞ்சா மற்றும் பணத்துடன் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

சிலாபம் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய, நேற்று முன்தினம் மதியம் தெதுரு ஓயா பகுதியில் விசேட சுற்றிவளைப்பு ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, 10 கிலோ 787 கிராம் கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. அத்துடன், போதைப்பொருள் வியாபாரம் மூலம் ஈட்டப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 128, 000 ரூபாய் பணமும் கைப்பற்றப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சிலாபம், சிங்கபுர பகுதியைச் சேர்ந்த 32 வயது ஆண் ஒருவரும் 26 வயது பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் சிலாபம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். மேலதிக விசாரணைகளில் சிலாபம் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

Ask
CABLE VISION

இப்போது டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் மட்டுமே!

150 மேற்பட்ட செனல்கள்!
20க்கும் மேற்பட்ட உள்ளூர் செனல்கள்
130க்கு மேற்பட்ட வெளிநாட்டு செனல்கள்

120 செனல்கள்
1065/- ரூபா
(அனைத்துவரிகளும் சேர்த்து)

155 செனல்கள்
1420/- ரூபா
(அனைத்துவரிகளும் சேர்த்து)

உங்கள் கேபிள் ரிவி இணைப்புக்களை டிஜிட்டலாகமாற்றுங்கள்!
அல்லது
உங்களிடம் சட்டவிரோத இந்திய DTH இணைப்புக்கள்
இருந்தால் அதனை தவிர்த்து எமது டிஜிட்டல்
இணைப்புக்களை பெற்றுக்கொள்ளுங்கள்!

* உங்களிடமுள்ள இந்திய DTH றிசீவர்களை எம்மிடம் தந்து
3 மாதம் இலவசமாக பார்த்து மகிழுங்கள்

* Condition apply

புதிய இணைப்புக்கு
*10,000/-
ரூபா மட்டுமே!

155 செனல்கள்
*3 மாதம் இலவசம்

விபரங்களுக்கு
0707 888 999

*Conditions apply

பஸ்களில் மயக்க மருந்து கலந்த பிஸ்கட்கள் கொடுத்து கொள்ளை

பொலிஸார் கடும் எச்சரிக்கை

மட்டக்களப்பு, ஏப். 11

யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு நகரங்களிலிருந்து மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்கு பஸ்களில் தனியாக பயணிக்கும் பயணிகளை இலக்கு வைத்து, மயக்க மருந்து கலந்த பிஸ்கட் கொடுத்து கொள்ளையடிக்கும் கும்பல் ஒன்று செயல்பட்டு வருகிறது என்று பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

இது குறித்து கிழக்கு மாகாண பெரும் குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தெய்வநாயகம் மேனன் விடுத்துள்ள முக்கிய அறிவுறுத்தல்கள் வருமாறு:

“கொள்ளையர்கள் சாதாரண பயணிகள் போல வேடமிட்டு, பஸ்களில் தனியாகப் பயணிக்கும் நபர்களிடம் சென்று பேச்சுக்கொடுத்து நெருக்கத்தை ஏற்படுத்திக்கொள்கின்றனர்.

பேச்சுவார்த்தையின் இடையே, தங்களின் பையிலிருந்து பிஸ்கட் பைக்கெட்களை எடுத்து பயணிகளுக்கு கொடுத்து சாப்பிட வற்புறுத்துகின்றனர். அந்த பிஸ்கட்களில் வீரியமிக்க மயக்க மருந்து கலக்கப்பட்டிருக்கும்.

பிஸ்கட் சாப்பிட்ட சிறிது நேரத்தில் பயணிகள் ஆழ்ந்த மயக்க நிலைக்குச் செல்கின்றனர். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தும் கொள்ளையர்கள், அவர்கள் அணிந்திருக்கும் தங்க ஆபரணங்கள் (சங்கிலி, மோதிரம், காப்பு) மற்றும் கைப்பையில் உள்ள பணத்தைக் கொள்ளையடித்துவிட்டு, பஸ்களிலிருந்து தப்பிச் சென்றுவிடுகின்றனர்.

மயக்க மருந்து கொடுக்கப்பட்ட பயணிகள் சுமார் 3 நாட்களுக்குப் பின்னரே சுயநினைவுக்கு வருகின்றனர்.

மயக்கமடைந்தவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் நிலைமை தொடர்கிறது. அண்மைக்காலமாக இவ்வாறான பல முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களில் பதிவாகியுள்ளன.

பொதுமக்கள் குறிப்பாக தனியாகப் பயணிக்கும் பயணிகள் பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தப்படுகின்றனர்:

பஸ்களிலோ அல்லது பொது இடங்களிலோ அறிமுகம் இல்லாதவர்கள் வழங்கும் உணவுப் பொருட்கள், பிஸ்கட், குளிர்பானங்கள் அல்லது எந்தவொரு பொருளையும் பெற்றுக்கொள்ளவோ அல்லது சாப்பிடவோ வேண்டாம்.

நீண்ட தூரப் பயணங்களின் போது அதிக விழிப்புணர்வுடன் இருக்கவும்.

சந்தேகத்துக்கிடமான நபர்கள் குறித்து அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கவும்.

தங்கள் பயணங்களின் போது மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறும், அறிமுகமில்லாத நபர்களிடம் எச்சரிக்கையாக இருக்குமாறும் பொலிஸார் பொது மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.”- என்று குறிப்பிட்டுள்ளார்.

(எ)

காலி துறைமுகத்தை வந்தடைந்த “சில்வர் டான்” சொகுசு கப்பல்

காலி, ஏப். 11

‘சில்வர் டான்’ எனப்படும் அதி சொகுசு உல்லாசக் கப்பல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலியை வந்தடைந்தது.

சுமார் 1,000 பேருடன் வந்துள்ள இந்தக் கப்பலில் 596 சுற்றுலாப் பயணிகளும் 411 பணியாளர்களும் அடங்குகின்றனர்.

தற்போது காலி துறைமுகத்துக்கு வெளியே நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ள இந்தக் கப்பல், 213 மீற்றர் நீளமுடையதுடன், உயர்தர வசதிகளுடன் கூடிய 11 தளங்களை கொண்டுள்ளது.

இந்த உல்லாசக் கப்பலில் வந்துள்ள சுற்றுலாப் பயணிகள், காலி கோட்டை, பலப்பிட்டிய மடு ஆறு, உனவட்டுன, ருமசல மற்றும் கொக்கல உள்ளிட்ட முக்கிய சுற்றுலா தலங்களுக்கு செல்ல திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

“தி கியூரியஸ் அண்ட் தி சீ” என்ற கருப்பொருளில் 141 நாள் உலகப் பயணத்தை மேற்கொண்டு வரும் இந்தக் கப்பல், அதன் பயணத்தின் ஒரு பகுதியாக ஏப்ரல் 7ஆம் திகதி திருகோணமலை துறைமுகத்தையும் வந்தடைந்தது.

அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் காலியை வந்தடைந்த இந்தக் கப்பல், கொழும்பு துறைமுகத்துக்கு இன்று புறப்படும்.

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு

கொழும்பு - கண்டி இடையே விசேட பஸ் சேவை ஆரம்பம்

கொழும்பு, ஏப். 11

எதிர்வரும் சித்திரை புத்தாண்டு காலத்தில் பொதுமக்களின் போக்குவரத்துக்காக கொழும்பு மற்றும் கண்டி இடையிலான விசேட பஸ் சேவைகளை ஆரம்பிக்க போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது.

எதிர்பார்க்கப்படும் மேலதிக பயணத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், வெள்ளிக்கிழமை முதல் இந்த விசேட பஸ் சேவைகள் முன்னெடுக்கப்படும் என்று போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

“டித்வா” புயல் காரணமாக ஏற்பட்ட சேதத்தால் கொழும்பு - கண்டி இடையிலான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன.

இதன் காரணமாகவே, பொதுமக்களின் தடையற்ற பயணத்தை உறுதிப்படுத்தும் நோக்கில் இந்த மாற்று போக்குவரத்து ஏற்பாடுகளை அதிகாரிகள் மேற்கொண்டனர்.

இந்த விசேட பஸ் சேவைகள் கொழும்பு, பாஸ்டியன் மாவத்தை பஸ் நிலையத்தில் இருந்து இயக்கப்படவுள்ளன.

சித்திரை புத்தாண்டு விடுமுறை காலத்துக்கு பின்னரும், பொதுமக்களின் தேவை மற்றும் செயல்பாட்டு சாத்தியக்கூறுகளை கருத்தில் கொண்டு, வார இறுதி நாட்களில் திருத்தப்பட்ட கால அட்டவணையின் கீழ் இந்த பஸ் சேவையை தொடர எதிர்பார்ப்பதாக பிரதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (எ)

குமார் சங்கக்காரவின் பெயரில் பரவும் போலி முதலீட்டு விளம்பரம்

பொதுமக்களுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, ஏப். 11

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார பாரிய முதலீட்டு வாய்ப்பொன்றை பரிந்துரைப்பதாக சமூக ஊடகங்களில் பரவி வரும் காணொல் போலியானது என்று பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

Factcrescendo எனும் உண்மை கண்டறியும் இணையத்தளம் இது தொடர்பில் முன்னெடுத்த விசாரணையில், குறித்த காணொலி மற்றும் அதனுடன் தொடர்புடைய செய்திகள் ஒரு திட்டமிடப்பட்ட இணைய மோசடியின் ஒரு பகுதி என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

உள்ளூர் ஊடக இணையத்தளம் ஒன்றின் வடிவமைப்பை ஒத்த வகையில் தயாரிக்கப்பட்ட இவ்வாறான ஒரு போலிச் செய்தியில், குமார் சங்கக்கார மற்றும் பிரபல வர்த்தகர் ஒதாரா குணவர்தன ஆகியோர் இவ்வாறான முதலீட்டுத் திட்டங்களுடன் தொடர்புடையவர்கள் எனப் பொய்யாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

தற்போது இந்த செய்திகள் நீக்கப்பட்டு அல்லது மாற்றப்பட்டு, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பெயரையும் இதனுடன் தொடர்புபடுத்தி வேறு போலித் தகவல்கள் பரப்பப்பட்டு வருகின்றன.

இவை முற்றாக மோசடியானவை என்று உறுதிப்படுத்தியுள்ள இலங்கை கணனி அவசரப் பிரதிபலிப்புத் தளம், இது குறித்து அவதானமாக இருக்குமாறு பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளது.

(எ)

எரிபொருள் விலையேற்றம்

காய்கறிகளின் வரவு 50 சதவீதம் வீழ்ச்சி

கொழும்பு, ஏப். 11

எரிபொருள் விலையேற்றம் காரணமாக இலங்கையின் பிரதான பொருளாதார மையங்களுக்கு நாள்தோறும் வரும் காய்கறிகளின் அளவு 50 சதவீதத்துக்கும் மேலாக குறைந்துள்ளது.

இது குறித்து தம்புள்ளை விசேட பொருளாதார மையத்தின் வர்த்தக சங்கத் தலைவர் சி.ஏ.சிறிவர்தன கருத்து தெரிவிக்கையில்,

போக்குவரத்து செலவு அதிகரித்துள்ள நிலையில், காய்கறிகளுக்கான மொத்த விற்பனை விலையும் பெருமளவு சரிவடைந்துள்ளதால் விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் பெரும் நஷ்டத்தை சந்தித்து வருகின்றனர். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இதே காலப்பகுதியில் கெப்பெட்டிபொல பொருளாதார மையத்துக்கு நாள் ஒன்றுக்கு 5.5 இலட்சம் கிலோ முதல் 6 இலட்சம் கிலோ வரை காய்கறிகள் வந்த நிலையில், தற்போது அது வெறும் 1.5 இலட்சம் கிலோவாக குறைவடைந்துள்ளது.

கொழும்பு போன்ற தொலைதூரப் பகுதிகளில் இருந்து பொருளாதார மையங்களுக்கு வரும் மொத்த வியாபாரிகளின் வருகை பெருமளவு குறைந்துள்ளது. மேலும் எரிபொருள் செலவைச் சமாளிக்க முடியாமல், இரண்டு அல்லது மூன்று வியாபாரிகள் ஒன்றிணைந்து ஒரு லொறியில் காய்கறிகளை ஏற்றிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

அதிக வாடகை கொடுத்து காய்கறிகளை எடுத்துச் சென்றாலும், அவற்றைச் சந்தையில் விற்பனை செய்வதில் கடும் சவால்களை எதிர்கொள்வதாக வியாபாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

தேசிய அபிவிருத்தி வங்கி நிதி மோசடி: சர்வதேச நாணய நிதியம் அவதானம்

கொழும்பு, ஏப். 11

தேசிய அபிவிருத்தி வங்கியில் இடம்பெற்ற உள்ளக நிதி மோசடி தொடர்பான நிலைமையை உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும், இது குறித்து இலங்கை மத்திய வங்கியுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருவதாகவும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட இலங்கைக்கான சர்வதேச நாணய நிதிய தூதுக்குழுத் தலைவர் எவன் பாபஜார்ஜியோ இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“இந்தச் சம்பவம் அமைப்பு ரீதியான பிரச்னையாக இல்லாமல், நிறுவன மட்டத்துக்குள் மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டதாக” மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

பாரிய நிதி இழப்பு ஏற்பட்டிருந்தாலும், குறித்த வங்கி போதுமான மூலதனத்துடனும் பணப்புழக்கத்துடனும் இயங்கி வருவதாக மத்திய வங்கி மதிப்பிட்டுள்ளது.

மேலும், வங்கியின் சாத்தியக்கூறு மற்றும் மூலதன விகிதங்கள் ஒழுங்குமுறை விதிகளின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச அளவை விட மேலாக உள்ளதால், வங்கியின் நிலைத்தன்மைக்கு உடனடி அச்சுறுத்தல் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கி மற்றும் தேசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடல்களின் அடிப்படையில், வங்கியின் மேற்பார்வைச் செயல்முறைகளில் ஏற்பட்ட குறைபாடே இந்த மோசடிக்கான முக்கிய காரணமாக இருக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

பாடசாலைகளுக்கு விடுமுறை

கொழும்பு, ஏப். 11

அரச மற்றும் அரச அனுமதியின் கீழ் இயங்கும் தனியார் பாடசாலைகளுக்கான முதலாம் தவணையின் இரண்டாம் கட்ட கற்றல் செயற்பாடுகள் நேற்றுடன் நிறைவடைந்ததாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதற்கமைய பாடசாலைகளுக்கு எதிர்வரும் 19 ஆம் திகதி வரையில் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாடசாலைகளுக்கான இரண்டாம் தவணைக்கான கற்றல் செயற்பாடுகள் எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

அவ்வாறு ஆரம்பிக்கப்படும் இரண்டாம் தவணைக்கான கற்றல் செயற்பாடுகள் 2026.07.24 வரை நடைபெறும் என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இன்று இரவு 10 மணிக்கு
உங்கள் டான் தமிழ் ஒளியில்
அரசியல் ஆய்வாளர் ஆ.யதீந்திரா கலந்துகொள்ளும்
நெற்றிக்கண் நிகழ்ச்சி.

சபாநாயகர்...

“நீங்கள் சபையைத் தொடர்ந்து நடத்த விடாவிட்டால், உங்களைச் சபையிலிருந்து வெளியேற்ற வேண்டியிருக்கும்” எனச் சபாநாயகர் பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்தார்.

“இந்தச் சபையில் ஒரேயொரு கடற்றொழில் அமைச்சரே (அமைச்சர் சந்திரசேகர்) இருக்கிறார், இருவர் இல்லை” எனச் சுட்டிக்காட்டிய சபாநாயகர், தேவையற்ற நாடகங்களை நிறுத்திவிட்டு அமருமாறு உறுப்பினருக்கு உத்தரவிட்டார்.

“உங்களுக்குச் சிங்களம் நன்றாகப் புரியும் என நினைக்கிறேன்” எனக் குறிப்பிட்ட சபாநாயகர், நிலையான கட்டளைகளுக்கு மதிப்பளித்துச் சபையை முன்னெடுத்துச் செல்ல ஒத்துழைக்குமாறு அவருக்குத் தெளிவுபடுத்தினார்.

வாக்குவாதத்தின் இறுதியில் தனது உரையை நிறுத்திக்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் , “சபை முதல்வருக்கு இடையூறு விளைவிக்க நான் விரும்பவில்லை, ஆனால் அமைச்சரின் ஊழல்கள் குறித்து எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும்” என எச்சரிக்கை விடுத்து அமர்ந்தார்.

இந்தச் சம்பவத்தினால் பாராளுமன்ற நடவடிக்கைகள் சிறிது நேரம் தடைப்பட்டதோடு, உறுப்பினர்களுக்கு இடையே கடும் வாக்குவாதங்களும் இடம்பெற்றன.

(அ)

ஜே.வி.பி எம்.பி.க்களின்...

எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க நேற்று தெரிவித்தார்.

எரிசக்தி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது-

ஆரம்பத்திலிருந்தே மின் உற்பத்தி நிலையங்களை நிர்மாணிப்பதற்கு ஜே.வி.பி எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்களை நடத்தியது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தை அமைக்கும்போது அவர்கள் எதிர்த்தார்கள். உமா ஓயா திட்டத்தையும் எதிர்த்தார்கள்.

லக் ஷபான நீர்மின் நிலையத்தை சிறிமாவோ பண்டாரநாயக்க அமைத்தார். விக்டோரியா, ரன்தெனிகல, கொத்மலை உள்ளிட்ட மகாவலி திட்டத்தின் கீழ் நீர்மின் நிலையங்களை ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அமைத்தது.

76 வருட கால ஆட்சியை விமர்சிக்கும் ஜே.வி.பி-யினர் ஒன்றை புரிந்துகொள்ள வேண்டும். அன்றைய தலைவர்கள் இந்த மின் நிலையங்களை அமைக்காவிட்டால், இன்று வீடுகளில் மின்சாரமே இருந்திருக்காது.

மின் திட்டங்களை எதிர்த்த ஜே.வி.பியினருக்கு எங்கள் வீடுகளில் மின்சாரத்தை துண்டிக்க இடமளிக்க முடியாது. அவர்களுக்கு தேவையென்றால் அவர்களின் வீடுகளில் மின்சாரத்தை துண்டித்துக்கொள்ளச் சொல்லுங்கள்-என்றார்.

(அ)

அமைதி ஏற்பட்டாலும்...

மட்டுமே நிகழும். மிகச் சிறந்த நிலையில் கூட, பழைய நிலைக்குத் திரும்புவது என்பது எளிதானதாக இருக்காது,” என்றும் கூறினார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு அறிவிக்கப்பட்ட நிபந்தனையுடன் கூடிய போர்நிறுத்த ஒப்பந்தத்தின் எதிர்காலம் ஆபத்தில் உள்ளது. இதற்குக் காரணம் ஒப்புக்கொள்ளப்பட்ட விடயங்களில் வாஷிங்டனுக்கும் தெஹ்ரானுக்கும் இடையே நிலவும் கருத்து வேறுபாடுகளேயாகும்.

உலகப் பொருளாதாரத்திற்குத் தேவையான எரிபொருளை வழங்கும் ஹார்முஸ் நீரிணை வழியாக எரிசக்தி விநியோகம் தடைபடக்கூடும் என்ற அச்சத்தால், சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை வியாழக்கிழமை உயர்ந்தது.

அடுத்த வாரம் வாஷிங்டனில் நடைபெறவுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்த வசந்த காலக் கூட்டங்களுக்கான முன்னோட்டமாக ஆற்றிய உரையில் ஜோர்ஜீவா போரின் விளைவான உலகளாவிய பொருளாதார மந்தநிலையின் தீவிரம் குறித்து அதிக நிச்சயமற்ற தன்மை நிலவுவதாகத் தெரிவித்தார்.

(அ)

இலங்கையில் எரிபொருள்...

கல்லூரியில் குறைந்த வருமானம் பெறும் 350 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களிடம் பேசியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மேற்காசிய மோதல்களினால் உலகில் சில நாடுகள் தற்போது எரிபொருள் நெருக்கடியைச் சந்தித்து வருகின்றன. ஆனால், இலங்கைக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் எந்த நேரத்திலும் வழங்க சீனா தயாராக உள்ளது.

ஒருவேளை நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் சூழல் உருவானால், இலங்கையில் இயங்கி வரும் சீனாவின் “சினோபெக்” நிறுவனம் ஊடாக அந்த நிலைமையை வெற்றிகரமாகக் கையாள முடியும்.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்ட கால நட்புறவைச் சுட்டிக்காட்டிய அவர், இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு சீன அரசாங்கம் தொடர்ந்து ஆதரவளிக்கும் .

மேற்காசியாவில் தற்போது ஏற்பட்டுள்ள போர்நிறுத்தம் நீடிக்க வேண்டும் என சீனா விரும்புகிறது. எவ்வாறாயினும் வருங்காலத்தில் ஏற்படக்கூடிய எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ளவும் இலங்கைக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்கவும் சீனா விழிப்புடன் இருக்கிறது-என்றார்.

(அ)

நாட்டில் 83 வீத...

மொத்த இறப்புகளில் சுமார் 83 வீதம் இடம்பெறுகின்றன. அவற்றில் 13 வீதம் அகால மரணங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், நீரிழிவு, புற்றுநோய் மற்றும் இதய நோய்கள் போன்ற தொற்றா நோய்கள் தொடர்ந்து அதிகரித்து வருவதால், இது நாட்டின் சுகாதார அமைப்பிற்குப் பெரும் சவாலாக மாறியுள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனுடன் தொடர்பாக, விபத்துகள் காரணமாக இதுவரை சுமார் 12 இலட்சம் பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நாளாந்தம் சுமார் 35 பேர் விபத்துகளால் உயிரிழப்பதுடன், ஒவ்வொரு மணி நேரத்திற்கும் சராசரியாக மூன்று பேர் விபத்து காயங்களால் மரணமடைவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

சதொசவில்...

அத்தியாவசியப் பொருள்களை விநியோகிக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர்ப் பதற்றம் காரணமாக, பொதுமக்கள் அத்தியாவசியப் பொருள்களை அதிகளவில் கொள்வனவு செய்து சேமித்து வருகின்றனர்.

இந்தத் திடீர் தேவையால் சதொசவின் சில கிளைகளில் தற்காலிகமாகப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக லங்கா சதொசவின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் இஷார கொடமன்ன தெரிவித்துள்ளார்.

“பண்டிகைக் காலத்தைக் கருத்திற்கொண்டு போதுமான அளவு பொருட்கள் கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளன. விலைமனு நடைமுறைகள் காரணமாக விநியோகத்தில் சிறு காலதாமதம் ஏற்பட்டிருந்தாலும், இன்று கிளைகளுக்குத் தேவையான பொருட்கள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்துள்ளோம்” என அவர் மேலும் குறிப்பிட்டார்.

(அ)

மக்கள் நலன்...

தங்களது பணிகளுக்குத் திரும்ப வேண்டும். தற்போதைய வேலைநிறுத்தம் எந்தவிதமான அடிப்படை ஆதாரமும் அற்றது. நாட்டின் சுகாதாரக் கட்டமைப்பை மக்கள் பெரிதும் நம்பியிருக்கும்வேளையில், இத்தகைய நடவடிக்கைகள் பொதுமக்களுக்கு இழைக்கப்படும் பெரும் அநீதி மற்றும் துரோகம். மருத்துவர்கள் இந்த நிலைக்கு வருவதற்குத் தங்களது வரிப்பணத்தைச் செலவிட்ட இந்த நாட்டு மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்குவதே அரசாங்கத்தின் கடமை.

பின்தங்கிய பகுதிகளில் பணியாற்றும் மருத்துவர்களின் நியமனம் தொடர்பான பிரச்னையை முன்வைத்தே இந்த வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்படுகிறது. இருப்பினும், தகுதி பெற்ற மருத்துவர்களில் 96.25 வீதமானவர்கள் ஏற்கனவே அரச சேவையில் இணைவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர்.

மீதமுள்ளவர்களில் பெரும்பாலானோர் ஏற்கனவே பணியில் இணைந்துள்ள நிலையில், ஒரு சில மருத்துவர்களின் தேவையை முன்னிறுத்தி ஒட்டுமொத்த சேவையையும் முடக்குவது முறையல்ல. இந்த வேலைநிறுத்தத்தின் பின்னணியில் அரசாங்கத்தைச் சங்கடத்திற்குள்ளாக்கும் குறுகிய அரசியல் உள்நோக்கம் இருக்கிறது. நிர்வாக ரீதியான பிரச்னைகளுக்குத் தீர்வு காணத் தயாராக இருந்தபோதிலும், பேச்சுவார்த்தைக்குச் சில மணி நேரங்களுக்கு முன்னதாக மீண்டும் வேலைநிறுத்தத்தை அறிவிப்பது உள்நோக்கம் கொண்டது. மருத்துவர்களுக்கான நியமனப் பட்டியலைத் தயாரிக்கும் அதிகாரம் சுகாதார அமைச்சு மற்றும் பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கே உள்ளது.

இடமாற்றங்கள் தொடர்பான விடயங்களிலேயே தொழிற்சங்கங்களுக்கு தலையிட முடியும். ஆனால் முதலாவது நியமனங்களில் அவர்களுக்கு தலையிட அதிகாரம் இல்லை-என்றார். (அ)

மின்சாரத்தை...

புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தில் மின்சாரத்தை மிகவும் பொறுப்புடன் பயன்படுத்துமாறு இலங்கை நிலையான ஆற்றல் அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் டி.எம்.டபிள்யூ.ஜே. பண்டாரா பொது மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர்ச் சூழல் உலகளாவிய விநியோகச் சங்கிலியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும், இது குறிப்பாக இலங்கை போன்ற நாடுகளுக்குப் புதைபடிவ எரிபொருள்களைப் பெறுவதில் பெரும் சவால்களை உருவாக்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். கடந்த காலங்களில் மின்சாரத்தைச் சேமிக்க பொதுமக்கள் வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றிகளைத் தெரிவித்த அவர், இந்தப் புத்தாண்டு காலத்திலும் அதே போன்றதொரு பொறுப்புணர்வுடன் செயற்படுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கான பல்வேறு நடைமுறை ஆலோசனைகளை வழங்கிய பேராசிரியர், குறிப்பாக இரவு 6:00 மணி முதல் 10:00 மணி வரையான காலப்பகுதியில் மின்சாரத் தேவை மிக அதிகமாக இருப்பதால், அந்த நேரத்தில் தேவையற்ற மின் பயன்பாட்டைக் குறைப்பது அவசியம் எனச் சுட்டிக்காட்டினார்.

விடுமுறை நாள்களில் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருப்பதாலும், சூரிய சக்தி மூலம் பகல் வேளையில் அதிக மின்சாரம் கிடைப்பதாலும், சமையல், துணி துவைத்தல் மற்றும் இஸ்திரி செய்தல் போன்ற பணிகளைப் பகல் நேரத்திலேயே முடித்துக் கொள்ளுமாறு அவர் அறிவுறுத்தினார். மேலும், தொலைக்காட்சி, இணைய ரௌட்டர்கள் மற்றும் ரைஸ் குக்கர் போன்ற சாதனங்களைப் பயன்படுத்தாத போது அவற்றின் சுவிட்சுகளை அணைத்துவிடுமாறும், குறிப்பாக அலுவலகங்களை மூடிச் செல்லும் போது மின் சாதனங்கள் துண்டிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

(அ)

இலஞ்ச ஊழல்...

நிறைவடைந்தது.

இதற்கமைய, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த சொத்து மற்றும் பொறுப்புக்கள் குறித்த சத்தியக் கடதாசியை சமர்ப்பித்துள்ளதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

(அ)

நிலக்கரி விசாரணை...

இதற்கமைய, நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தொடர்ந்து இந்த விசேட விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்படும் எனவும், இதற்காக தற்போது சேவையில் உள்ள உயர்நீதிமன்ற நீதியரசர்கள் நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

(அ)

பொய்க் குற்றச்சாட்டுகள்...

உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கு பதிலளித்த போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

முக்கியமாக நான் இந்த சாணக்கியன் எம்.பி.க்கு சொல்ல வேண்டும். இன்று வடக்கை எடுத்துக்கொண்டால், சாணக்கியன் எம்.பி. பற்றியும், அவருக்குப் பிறகு அவரது குருவான சுமந்திரனுக்கு எதிராகவும் அதிகமாகப் பேசுவது நான்தான்.

அந்தத் கோபத்தை மனதில் வைத்துக்கொண்டு பொய்க் குற்றச்சாட்டுகளை முன்வைக்க வேண்டாம். அப்படி குற்றச்சாட்டுகள் இருந்தால் தயவுசெய்து அவற்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பியுங்கள், இல்லையென்றால் சி.ஐ.டி-யிடம் சென்று ஒப்படையுங்கள். ஒப்படைத்துவிட்டு அந்த வேலையைச் செய்யுங்கள்.

நான் கையூட்டுப் பெற்றேனா இல்லையா என்பது உங்களுக்கும் தெரியும். ஆனால், உங்களுக்கு எதிராக இப்போது இந்த பாராளுமன்றத்தில் தமிழ் மொழியில் பேசுவது நான் மட்டும்தானே. எனவே, அந்தத் கோபத்தை வைத்துக்கொண்டு இந்தப் பொய்க் குற்றச்சாட்டுகளை முன்வைக்க வேண்டாம். தயவுசெய்து அவற்றைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள் - என்றார்.

(அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

வடமராட்சி கிழக்கில் 300 ஏக்கர் காணி அபகரிப்புக்கு மீண்டும் மக்கள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஏப். 11

வடமராட்சி கிழக்கு பகுதியில் 300 ஏக்கர் காணியை தனியார் நிறுவனத்துக்கு வழங்கும் திட்டத்துக்கு எதிராக மக்கள் மீண்டும் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

மணல்காடு, குடத்தனை வடக்கு மற்றும் பொற்பதி குடத்தனை கிழக்கு கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுடன், குறித்த தனியார் நிறுவனம் மற்றும் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் தலைமையில் நேற்று முன்தினம் பொற்பதி பகுதியில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தத் திட்டத்தின் கீழ், கோல்ப் விளையாட்டு வசதிகளுடன் கூடிய சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு மையம் அமைப்பதற்காக 300 ஏக்கர் காணியைப் பெற்றுக்கொள்ள முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், கிராம மக்கள் தங்கள் நிலங்களை வழங்க முடியாது எனத் தெளிவாக மறுத்துள்ளனர். தங்களது கிராமங்களில் ஏற்கனவே நிலப்பற்றாக்குறை நிலவுகின்றது என்றும், அன்றாட வாழ்வாதார தேவைகளுக்கே போதிய நிலம் இல்லையென்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

மேலும், புதிய குடும்பங்களுக்கு கூட இதுவரை காணி வழங்கப்படாத நிலையில், வெளிநோக்குத் திட்டங்களுக்கு நிலம் வழங்க முடியாது என மக்கள் வலியுறுத்தினர். இது போன்ற கலந்துரையாடல்கள் பலமுறை நடத்தப்பட்ட போதும், மக்கள் எதிர்ப்பை மீறி திட்டம் மீண்டும் முன்வருவது வருத்தமளிப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதற்கிடையில், குறித்த தனியார் நிறுவனம் கிராம மக்களுடன் நடத்திய இந்த கலந்துரையாடல் குறித்து தமக்கு முன்கூட்டியே அறிவிக்கப்படவில்லை என வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் கூட்டத்தில் தெரிவித்தார்.

இந்நிலையில், காணியற்ற குடும்பங்களின் விவரங்களை சேகரித்து, அவர்களுக்கு முன்னுரிமையுடன் காணி வழங்கும் திட்டம் விரைவில் முன்னெடுக்கப்படும் எனவும் பிரதேச செயலாளர் உறுதியளித்தார். (அ)

அரச வைத்தியர்கள் சங்கம் முன்னெடுக்கும் பணிப்புறக்கணிப்பு நேற்றும் தொடர்ந்தது!

கொழும்பு, ஏப். 11

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் முன்னெடுத்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

பயிற்சிக்கு பின்னர் வைத்தியர்களுக்கான நியமனங்களை வழங்குவதில் சுகாதார அமைச்சு தமக்கு வழங்கிய உடன்படிக்கைகளை மீறியுள்ளதாகத் தெரிவித்து, அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நேற்று முன் தினம் காலை 8.00 மணி முதல் நாடளாவிய ரீதியில் இந்த பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்தது.

குறித்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் காரணமாக வைத்தியசாலைகளின் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்ததுடன், நோயாளர்கள் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்தனர்.

எனினும், வெளியிடப்பட்டுள்ள நியமனப் பட்டியலை உடனடியாக நீக்கி, இப்பிரச்னைக்குத் தீர்வு காணும் வரை பணிப்புறக்கணிப்பு தொடரும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், குறித்த நியமனங்கள் தொடர்பில் குறித்த சங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதை சுகாதார அமைச்சர் நிராகரித்து வருகிறார். (அ)

கிளிநொச்சியில் மணல் விநியோகம் ஒரு மாதத்துக்குள் புதிய பொறிமுறை

விலை அரைவாசியாக குறைக்க தீர்மானம்

கிளிநொச்சி, ஏப். 11

கிளிநொச்சி மாவட்டத்தில் மணல் விநியோகத்தை ஒழுங்குபடுத்தும் நோக்கில் நடைபெற்ற மாவட்ட மட்டக் கூட்டத்தில் பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. அதன்படி, புதிய பொறிமுறையூடாக ஒரு மாதத்திற்குள் மணல் விநியோகம் ஆரம்பிக்கவும், மணலின் விலையை அரைவாசியாகக் குறைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் மற்றும் அமைச்சர் இ. சந்திரசேகரின் பிரதிநிதி சு. கபிலன் ஆகியோரின் பங்கேற்புடன், மாவட்ட செயலாளர் சு. முரளிதரன் தலைமையில் இந்தக் கூட்டம் நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்தவும், விநியோகச் சங்கிலியை ஒழுங்குபடுத்தவும் அவசியம் வலியுறுத்தப்பட்டது. உள்ளூராட்சி மன்றங்களின் மூலம் மணல் அகழ்வு மற்றும் விநியோகத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

மேலும், ஆறுகள் மற்றும் குளங்களில் இருந்து மணலை அகழ்ந்து களஞ்சியப்படுத்துதல், பாதுகாப்பை பலப்படுத்துதல், ஒப்பந்தத் தாமதங்களைத் தவிர்க்க காலவரையறை நிர்ணயம் போன்ற நடவடிக்கைகளும் தீர்மானிக்கப்பட்டன.

அத்துடன், எதிர்காலத்தில் மணல் விநியோகம் கியூ.ஆர். குறியீடு அடிப்படையிலான இலத்திரனியல் முறையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து குறைந்தது 20,000 கியூப் மணலைப் பெற்றுக்கொள்ள முடியும் என மதிப்பிடப்பட்டுள்ள நிலையில், இந்த புதிய திட்டம் மணல் விலையை குறைப்பதுடன் சட்டவிரோத அகழ்வுகளையும் கட்டுப்படுத்தும் என அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (அ)

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் முன் வத்திராயன் மக்கள் கவனயீர்ப்பு போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 11

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் முன்பாக நேற்று காலை 9 மணியளவில் வத்திராயன் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டம், கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகத் தெரிவைச் சுற்றியுள்ள சர்ச்சைகளை மையமாகக் கொண்டு இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவிக்கையில்-

2024 ஆம் ஆண்டு நிர்வாகத் தெரிவின்போது சந்தாப்பணம் தொடர்பாக ஏற்பட்ட முரண்பாடுகளைத் தவிர்க்கும் நோக்கில், ஜனவரி 15 முதல் பெப்ரவரி 15 வரை புதிய உறுப்பினர்கள் இணைவதற்கான காலம் அறிவிக்கப்பட்டது. அதன்படி 93 பேர் சந்தாப்பணம் செலுத்தி சங்கத்தில் இணைந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, மார்ச் 6 அன்று புதிய நிர்வாகத் தெரிவு நடைபெறும் என கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் சில மணி நேரங்களுக்குப் பின்னர், யாப்பு விதிகளின்படி மூன்று மாதங்களுக்குப் பிறகே தெரிவு நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில் மேலும் 42 புதிய உறுப்பினர்களை இணைக்க முயற்சிக்கப்பட்டதாகவும், அதனை தற்போதைய நிர்வாகம் ஏற்க மறுத்ததாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர். மூன்று மாத காலத்துக்குள் புதிய உறுப்பினர்களை இணைப்பது குழப்பத்தை ஏற்படுத்தும் என்றும், இதனால் கிராமத்தில் முரண்பாடுகள் உருவாகியுள்ளதாகவும் அவர்கள் குற்றம் சாட்டினர்.

இந்நிலைக்கு முழுப்பொறுப்பும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருக்கே எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றம்சாட்டினர்.

தாங்கள் பிரதேச செயலாளருக்கு வழங்ககொண்டு வந்த மனுவை வழங்க முயன்றபோது, முதலில் பதில் உத்தியோகத்தர் அதை ஏற்க மறுத்ததாகவும், பின்னர் மருதங்கேணி பொலிஸ் பொறுப்பதிகாரியுடன் சென்ற பின்னரே அந்தக் கடிதம் பெறப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

வவுனியாவில் 4 உணவகங்களுக்கு எதிராக வழக்கு

வவுனியா, ஏப். 11

இராணுவ உணவகம் உட்பட 4 உணவகங்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெற்கு தமிழ் பிரதேச சபை தவிசாளர் பா.பாலேந்திரன் தெரிவித்தார்.

வவுனியா தெற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள உணவகங்கள் சுகாதார முறைப்படி இயங்குகின்றதா என்பதை பரிசீலிக்க நேற்று முன்தினமும் நேற்று அதிகாலையும் தவிசாளர் தலைமையிலான சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் உட்பட பொது சுகாதார பரிசோதகர்கள் குழுவினர் பூவரசங்குளம் பகுதியிலுள்ள உணவகங்களுக்கு அதிரடியாக விஜயம் செய்து பரிசோதனை மேற்கொண்டனர்.

இதன்போது சுகாதாரமற்ற முறையில் இயங்கி வந்த உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

குறிப்பாக ஏ-9 வீதி தாண்டிக்குளம் பகுதியில் அமைந்துள்ள இராணுவத்தாரால் நடத்தப்படும் உணவகம் உட்பட 4 உணவகங்கள் மற்றும் வெதுப்பக உணவுகளை விற்பனை செய்யும் ஓட்டோவுக்கு எதிராகவும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

இன்று இரவு 7 மணிக்கு
எது சரி எது பிழை
உங்கள் டான் தமிழ் ஒளியில்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.04.2026 அன்று
ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.